தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும் என்று புகழாரம் சூட்டியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

கவிமணி அவர்கள் வாழ்ந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்று கவி புனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பழந்தமிழ்ப் பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துகளும் நிறைந்த பல பாடல்களைக் கவிமணி அவர்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பான "மலரும் மாலையும்" நூலில் இருந்து, இவருடைய நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இறை வழிபாடு, சாதி பேதம் கடிதல் மற்றும் குழந்தைகளிடம் கொண்ட பற்று ஆகியவற்றை அறியலாம்.

"பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்பது நமது கடமை" என்றும், "உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது" என்றும் வலியுறுத்தியவர் கவிமணி அவர்கள்.

குழந்தைகளுக்காக தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய, அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். பறவைகளைப் பற்றி குழந்தைகள் விளித்துப் பாடும் இவரது பாடல்கள் சுவை மிக்கவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் தித்திக்கும் பாடல்கள் நமது செவிகளுக்கு என்றும் திகட்டாத இன்பம் தரக்கூடியவை.

இப்படிப்பட்ட தலைசிறந்த தமிழ் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கும்மிடிப்பூண்டி, ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வகையில்,

2012 மே 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

"வேகம் விவேகமன்று" என்பதை உணர்ந்து, சாலை விதிகளைச் சரியாக கடைப்பிடித்து, வாகனங்களை இயக்கக்கூடிய திறமையான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய சர்வதேச தரம் வாய்ந்த ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் பொருட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அலுவலகம், வகுப்பறைகள், ஓட்டுநர் பயிற்சி ஆய்வுக் கூடம், பணிமனை, மாணவர் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் போன்ற வசதிகளுடன், ஓட்டுநர் பயிற்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி மைதானமும் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பப் பயிற்சியின்மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் வகையிலும், அறிவியல் ரீதியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் வண்ணமும், அவர்களது பண்பாட்டினை உயர்த்தும் வகையிலும், விபத்துகளைத் தவிர்க்கும் வகையிலும், இந்த ஓட்டுநர் பயிற்சி மையம், பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய சர்வதேச தரத்திற்கு இணையாக உறைவிடத்துடன்கூடிய ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், ஓட்டுநரின் திறமையை விஞ்ஞான முறையில் காணொலியுடன் பதிவு செய்யப்பட்ட வசதிகளுடன் ஆராய்ந்து, திறனில்லாத ஓட்டுநர்களை எளிதில் கண்டறியவும், அவர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கவும் வழிவகை ஏற்படும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச ஓட்டுநர் உரிமங்களை வழங்கும்.

மேலும், இங்குள்ள கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

சர்வதேச தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாக கும்மிடிப்பூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சி பிரிவு தரம் உயர்த்தப்படுவதன்மூலம் தமிழகத்திலுள்ள போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து, சாலைகளின் தன்மைக்கேற்ப வாகனங்களை இயக்கி, விபத்துகளைப் பெருமளவில் தவிர்க்கும் திறன் கொண்ட ஓட்டுநர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-05

4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு சிலை அமைத்தல், ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகம், ஒரு இனம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமென்றால் அந்த சமூகத்தின், அந்த இனத்தின் மொழி, அந்த மொழியின் வரலாறு பாராட்டப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும். அந்த வகையிலே, தமிழகத்தின் பண்பாட்டைக் காப்பாற்றுகிற வகையிலே, தமிழகத்தின் மொழி வரலாற்றில் மிகச் சிறப்பான இடத்திற்குக் கொண்டு செல்கிற வகையில் மிகச் சிறந்த கவிஞரான தேசிக விநாயகம் பிள்ளையினுடைய திருவுருவச் சிலையை அவர் பிறந்த கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்திலே அவரை நினைவுபடுத்துகிற வகையிலே தமிழர்களின் மொழியாகவும், விழியாகவும், வழியாகவும் இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே உருவாக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு மணிமண்டபம் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மொழிப் பேரறிஞர்களை சிறப்பிப்பதிலே வெறும் தேன்மொழி என்றோ, கனிமொழி என்றோ, செம்மொழி என்றோ பெயர்